**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.172/2024**

Deposition of Witness of PW6

| | | | |
|---|---|---|---|
| Name | : மாதேஸ்வரன் | Calling | : |
| Father/Husband's Name | : ராமசாமி | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 08th April 2026.

எதிரிகள் ஆஜரில் இல்லை.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்சமயம் அரச்சலூர் வீரப்பம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 30.08.2023ம் தேதி அரச்சலூர் காவல்நிலையத்தில் பயிற்சி உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது சிறப்பு உதவி ஆய்வாளர் முருகேசன் என்பவர் மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்த நிலைய குற்ற எண்.186/2023 சட்டபிரிவுகள் 294(b), 427, 323, 506(i) இதச வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டேன்.

2. வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 30.08.2023ம் தேதி காலை 7.00மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான புதுவெள்ளியம்பாளையம் வாதியின் வீடு முன்பு சென்று சாட்சிகள் சந்திரசேகரன், பெரியசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.7 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பின்னிட்டு சம்பவ இடத்தில் அதே சாட்சிகளான சந்திரசேகரன், பெரியசாமி ஆகியோர்களின் முன்னிலையில் காலை 7.30 மணிக்கு சம்பவ இடத்தில் உடைந்த காரை கலவைகள் துண்டுகள் சிறிதளவை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.08 17:50:57 +0530

3. சாட்சிகள் சுந்தரமூர்த்தி, வள்ளியம்மாள், குழந்தைசாமி, சந்திரசேகரன், பெரியசாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான உடைந்த காரை கலவைகள் துண்டுகள் சிறிதளவை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்புவித்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உடைந்த காரை கலவைகள் துண்டுகள் சிறிதளவு அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் எதிரிகள் மரகதம், பேபி, செந்தில்குமார் ஆகியோர்களை தேடிவந்த நிலையில் அவர்கள் ஈரோடு மாண்புமிகு மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுவிட்டதால் நான் அவர்களை கைது செய்யவில்லை.

4. 22.09.2023 ம் தேதி வழக்கை விசாரணை எடுத்து கொண்டு இவ்வழக்கில் காயம்பட்ட வாதி சுந்தரமூர்த்திக்கு சிகிச்சை அளித்த ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை மருத்துவர் திரு.ஸ்ரீதர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நிலை சார்பு ஆய்வாளர் முருகேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 22.09.2023ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து மரகதம், பேபி, செந்தில்குமார் ஆகியோர்கள் மீது 294(b), 427, 323, 506(i) இதச ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் புகார்தாரர் மற்றும் எதிரிகளுக்கு இடையே நிலம் சம்பந்தமான பிரச்சனை இருந்தது என்பதை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எதிரிகள் மேற்படி நிலம் சம்பந்தமாக சிவில் வழக்கு தொடர்ந்துள்ள விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். சிவில் பிரச்சனை இருக்கும் நிலையில் பொய்யான புகார்கள் வர வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புகள் உள்ளது. இந்த வழக்கில் இரு தரப்பினர்களும் எதிர் எதிராக புகார்கள் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அரச்சலூர் காவல்நிலையத்தில் இந்த வழக்கின் வாதிக்கு எதிராக புகார் கொடுத்துள்ளார்கள் என்றும், நான் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. இந்த வழக்கு சம்பவம் நடந்த தேதிக்கும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட தேதிக்கும் காலதாமதம் உள்ளதை விசாரித்து தெரிந்து

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.08 17:51:11 +0530

கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன், சிவில் பிரச்சனை என்பதால் CSR மனு கொடுத்து விசாரித்து பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அதனால் தாமதம் ஏற்பட்டது. புகார் பெறப்பட்டபோது மருத்துவ அறிக்கை ஏதாவது பெற்றேனா என்றால் இல்லை. வாக்குமூல புகாரின் பேரில் தான் நான் விசாரணை செய்துள்ளேன் என்றால் சரிதான். நில தகராறு காரணமாக பழிவாங்கும் நோக்கத்தில் இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நிலத்தின் உரிமை ஆவணங்களை நான் வாங்கி பார்த்தேனா என்றால் கிராம நிர்வாக அலுவலரை விசாரித்து தெரிந்து கொண்டேன், ஆவணத்தை வாங்கவில்லை. கிராம நிர்வாக அலுவலரை நான் விசாரணை செய்தேன் என்று சொன்னதற்கு ஆதரவாக அவரது வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. சிவில் வழக்கு சம்பந்தமாக வழக்கு ஆவணங்களை பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் விசாரணை செய்தவர்கள் அனைவரும் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் சரிதான். நான் ஒருதலை பட்சமாக விசாரணை அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், சரிவர புலன்விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் நிராகரிக்கப்படவேண்டும் என்றால்சரியல்ல. எனவே இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.04.08 17:51:16 +0530